Ontario

NEWS

Ministry of Government Services

# அரசாங்க சேவைகளைஅடைவதற்கான வழியை மேம்படுத்தல்

*உடல்நல அட்டை (ஹெல்த் கார்ட்) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தை (டிரைவர்ஸ் லைசன்ஸ்) புதுப்பித்தலை ஒரேயிடத்திற்கு கொண்டுவருகிறது மக்கிண்டி அரசு*

**செய்திகள்** ஜூலை 22, 2009

எதிர்வரும் இலையுதிர் காலம் தொடங்கி, ஹெல்த் காட், டிரைவர்ஸ் லைசன்ஸ் மற்றும் வாகனப் பதிவு சேவைகள் ஆகியவற்றை இன்னுமதிகமான ஒன்டாரியோ வாசிகள் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இனி வரும் மாதங்களில் ஒன்டாரியோசேவைகள் அதாவது செர்விஸ் ஒன்டாரியோ பின்வருவனவற்றை வழங்கும்:

- ஹெல்த் கார்ட் சேவைகளை தற்போதைய 27 OHIP அலுவலகங்களிலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட 300 செர்விஸ் ஒன்டாரியோ சென்டர்களுக்கு விஸ்தரிக்கும்
- சாரதி மற்றும் வாகன சேவைகளை 300 நிலையங்களிலும் கிடைக்கச் செய்யும்.
- இன்டர்நெட் மூலம் வேண்டினால் வாகனப் பதிவு ஸ்டிக்கர்களை ஐந்து வியாபார நாட்களுக்குள் வழங்கும்.

இந்த மாற்றங்கள் வழக்கமான அரசாங்க சேவைகளைப் பெற மக்களுக்கு குறிப்பாக கிராமிய மற்றும் வடதிசைச் சமூகங்களில் உள்ளவர்களுக்கு முன்பைவிட அதிகமான வழிகளைத் திறக்கும். ஒன்டாரியோ வாசிகளில் ஏறக்குறைய 95 சதவிகிதத்தினர் ஒருங்கிணைக்கப்பட்ட செர்விஸ் ஒன்டாரியோ சென்டர் ஒன்றிற்கு 10 கிலோமீட்டர் தொலைவிற்குள்ளேயே இருப்பார்கள்.

## மேற்கோள்கள்

"ஒன்டாரியோ வாசிகள் தங்களுக்குத் தேவையான மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்கும்பொருட்டு, அரசாங்கமானது தமது வரிப்பணத்தை ஞானமாக செலவிட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். விடையங்களை துரிதமாக, நட்புறவுடன் மற்றும் இலகுவான விதத்தில் மக்களுக்கு வழங்க, செர்விஸ் ஒன்டாரியோவானது சேவைகளை ஒருங்கிணைப்பதோடு அவை வழங்கப்படும் இடங்களையும் ஒன்றிணைக்கின்றது."

– ஹரின்டர் டக்ஹார், அரசாங்க சேவைகளுக்கான அமைச்சர்

## துரித உண்மைகள்

- தற்சமயம், இரண்டு செர்விஸ் ஒன்டாரியோ சென்டர்களில் மட்டுமே ஹெல்த்கார்ட், டிரைவர்ஸ் லைசன்ஸ் மற்றும் வாகனப்பதிவுச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- கிராமிய சமூகங்களில் ஹெல்த் கார்ட் சேவைகளை அடைவதற்கான வழிமுறைகள் 2 இலிருந்து 163 செர்விஸ் ஒன்டாரியோ சென்டர்களுக்கு விஸ்தரிக்கப்படும்.
- வட திசைச் சமூகங்களில் ஹெல்த் கார்ட் சேவைகளுக்கான வழிமுறைகள் 6 இலிருந்து 67 செர்விஸ் ஒன்டாரியோ சென்டர்களுக்கு விஸ்தரிக்கப்படும்.
- முகவரி மாற்றங்கள், பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் அவுட்டோர் கார்ட் புதுப்பித்தல் போன்றவை இன்டர்நெட்டில் வழங்கப்படும் சேவைகளில் சிலவாகும்.

## அதிகம் கற்றுக்கொள்ளுங்கள்

செர்விஸ் ஒன்டாரியோவால் வழங்கப்படும் சேவைகள்

உங்களுக்கு அருகாமையில் உள்ள அலுவலக இடத்தை கண்டுபிடிக்க

Sarbjit Kaur, Minister's Office, 416-327-0125
Ciaran Ganley, Communications Branch, 416-325-8659